




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








Vol: 03 | Issue: 13 | 4 Pages | 13.8.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825


மலர்: 03 | இதழ்: 13 | 4 பக்கங்கள் | 13.8.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825




**சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரு நோய்**

**விளக்கம்: எல்லாப் பொருளுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து பற்றுக் கெடுமாறு ஒழுகினால், சார்வதற்க்கு உரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையா.**

## அமெரிக்கா அதிக வரி விதிப்பு: பாதிப்பை சமாளிக்க மத்திய அரசு எடுத்த முடிவு



புதுடெல்லி, ஆக. 13

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 50 சதவீத வரி விதித்து இருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் இந்த நடவடிக்கை இந்தியாவுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.டிரம்பின் இந்த கொடூர வரி விதிப்பால் இந்தியாவின் ஏற்றுமதி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. குறிப்பாக ஜவுளி, தோல், ரத்தினங்கள், நகைகள் என பல்வேறு துறைகள் பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும் அச்சம் ஏற்பட்டு உள்ளது. அமெரிக்காவின் இந்த அதிரடிக்கு அடிபணியமாட்டோம் என அறிவித்துள்ள மத்திய அரசு, மறுபுறம் இந்த பாதிப்பை சரி செய்ய பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதில் முக்கியமாக அமெரிக்காவுக்குப் பதிலாக வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியை அதிகரிக்கும் வாய்ப்புகள் குறித்து பரிசீலித்து வருகிறது.அந்தவகையில் மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவை சேர்ந்த 50 நாடுகளுக்கு ஏற்றுமதியை அதிரிக்க நடவடிக்கை எடுத்து உள்ளது. இந்த நாடுகள் இந்தியாவின் 90 சதவீத ஏற்றுமதிக்கு பொறுப்பாக உள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. இதில் ஏற்கனவே 20 நாடுகள் மீது மத்திய வர்த்தக அமைச்சகம் கவனம் செலுத்தி வரும் நிலையில், மேலும் 30 நாடுகள் இந்த வியூகத்துக்குள் கொண்டு வரப்பட்டு உள்ளன. இதற்காக ஏற்றுமதி பல்வகைப்படுத்துதல், இறக்குமதி மாற்று மற்றும் ஏற்றுமதியில் போட்டித்தன்மை என்ற 4 தூண்களின் அடிப்படையில் வர்த்தக அமைச்சகம் பணியாற்றி வருகிறது. இந்த அடிப்படையில் விரிவான ஆய்வு நடந்து வருவதாகவும், ஒவ்வொரு தயாரிப்பு அடிப்படையில் பணியாற்றி வருவதாகவும் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.சர்வதேச பொருளாதார நிலையற்ற தன்மை உள்ளிட்ட காரணிகளால் கடந்த ஜூன் மாதத்தில் இந்தியாவின்ஏற்றுமதி 35.14 பில்லியன்டாலர்(சுமார்ரூ.3லட்சம்கோடி)அளவுக்கு தொடர்ந்து சமநிலையாகவே இருந்தது.அந்தவகையில் நாட்டின் வர்த்தக பற்றாக்குறை 4 மாதங்களில் இல்லாத அளவாக 18.78 பில்லியன் அமெரிக்க டாலர்களாகக் குறைந்தது.அதேநேரம் ஏப்ரல்ஜூன் காலாண்டில் ஏற்றுமதி 1.92 சதவீதம் அதிகரித்து 112.17 பில்லியன் டாலராகவும் (சுமார் ரூ.9.8 லட்சம் கோடி), இறக்குமதி 4.24 சதவீதம் அதிகரித்து 179.44 பில்லியன் டாலராகவும் (சுமார் ரூ.15.73 லட்சம் கோடி) இருந்தது குறிப்பிடத்தக்கது.

## பைக்கின் பின்னால் மனைவியின் உடலை கட்டி எடுத்துச்சென்ற வாலிபர்: நெஞ்சை உருக்கும் அதிர்ச்சி சம்பவம்



மும்பை, ஆக. 13

மராட்டிய மாநிலம் நாக்பூர் குமாரி சுங்கச்சாவடி அருகில் மோட்டார் சைக்கிள் பின் இருக்கையில் வாலிபர் ஒருவர், பெண்ணின் உடலை கட்டி வைத்து சர்வசாதாரணமாக சென்று கொண்டு இருந்தார். இதைப்பார்த்து அங்கு இருந்த போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்த முயன்றனர். ஆனால் வாலிபர் நிற்காமல் சென்றார். இதையடுத்து போலீசார் ஜீப்பில் பின்தொடர்ந்து சென்று வாலிபரை தடுத்து நிறுத்தினர். மேலும் அவர் மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற பெண்ணின் உடலை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் நாக்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் போலீசார் நடத்திய விசாரணையில் அதிர்ச்சி தகவல் வெளியானது. நாக்பூர் அருகே உள்ள லோனாரா பகுதியில் வசித்து வருபவர் அமித் பும்ரா யாதவ் (வயது35). இவர் கடந்த 9ந்தேதி மனைவி கியார்ஷியுடன் (34) மோட்டார் சைக்கிளில் மத்திய பிரதேசம் மாநிலம் சியோனியில் உள்ள சொந்த ஊரான கரன்பூருக்கு சென்றார். மாலை 3 மணியளவில் நாக்பூர்ஜபல்பூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டு இருந்தபோது, அந்த வழியாக சென்ற லாரி வாலிபரின் மோட்டார் சைக்கிளில் மோதியது. இதில் பின்னால் இருந்த கியார்ஷி தவறி விழுந்தார். அப்போது லாரி அவரின் மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்து நடந்த பகுதி வனப்பகுதியில் இருந்ததால் அங்கு மக்கள் நடமாட்டம் அதிகமாக இல்லை. ஒரு சில வாகனங்கள் மட்டுமே அந்த வழியாக சென்று உள்ளது. மனைவி விபத்தில் உயிரிழந்ததால் செய்வதறியாது நின்ற வாலிபர் உதவி கேட்டு அந்த வழியாக சென்ற வாகனங்களை நிறுத்தினார். ஆனால் யாரும் வாகனத்தை நிறுத்தி உதவி செய்யவில்லை என கூறப்படுகிறது.

இதனால் விரக்தி அடைந்த வாலிபர், மனைவியின் உடலை மோட்டார் சைக்கிளில் கட்டி கொண்டு வீட்டுக்கு எடுத்து செல்ல முயன்றது தெரியவந்தது. இதையடுத்து சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விபத்தை ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்ற லாரி டிரைவரை தேடிவருகின்றனர். இதற்கிடையே வாலிபர் மனைவியின் உடலை மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லும் நெஞ்சை உருக்கும் வீடியோ காட்சிகள் தற்போது சமூகவலைதளத்தில் வேகமாக பரவி வருகிறது. நெட்டிசன்கள் அந்த வீடியோவை பார்த்து வேதனையை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

## வயநாடு எம்.பி. பிரியங்காவை காணவில்லை: போலீசில் அளிக்கப்பட்ட புகாரால் பரபரப்பு

வயநாடு, ஆக. 13

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி. இவர் வயநாடு நாடாளுமன்ற தொகுதியில் இருந்து எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தநிலையில் கடந்த 3 மாதங்களாக அவரைகாணவில்லை என்று வயநாடு மாவட்ட பா.ஜனதா பட்டியல் மோர்ச்சா தலைவர் முகுந்தன் பள்ளியரா வயநாடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டிடம் புகார் அளித்து உள்ளார். அந்த புகாரில், ‘பிரியங்கா காந்தி கடந்த மூன்று மாதங்களாக மாவட்டத்தில் இருந்து காணாமல் போயுள்ளார். நூற்றுக்கணக்கான உயிர்களைக் கொன்ற வயநாடு சூரல்மாலாவில் ஏற்பட்ட மிகப்பெரிய பேரழிவின் போது அவர் காணாமல் போயுள்ளார். இந்த பாதிக்கப்பட்ட பகுதிகளில் எதிலும் அவரைகாணவில்லை. மாநிலத்திலேயே வயநாட்டில் தான் அதிக பழங்குடி மக்கள் வசிக்கின்றனர். ஆனால், பழங்குடி சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் எம்.பியின் இருப்பு இல்லை. எனவே, இந்த புகாரை ஏற்று காணாமல் போன எம்.பியைக் கண்டுபிடிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்’ என்று கூறப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மத்திய மந்திரி சுரேஷ் கோபியை காணவில்லை என்று திருச்சூர் போலீசில் காங்கிரஸ் மாணவர் அமைப்பு புகார் கொடுத்திருந்தது. அந்த புகாரில், ‘கடந்த இரண்டு மாதங்களாக, திருச்சூரில் நடைபெறும் எந்த நிகழ்வுகளிலும் எம்.பி.யை முற்றிலும் காணவில்லை. மேயர் மற்றும் வருவாய் அமைச்சர் கூட அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை.சுரேஷ்கோபியின்அலுவலகத்தைதொடர்புகொள்ளமுயற்சித்தபோது, அவர் எங்கிருக்கிறார் என்றோ திரும்பிய தேதி குறித்தோ எந்த தகவலும் கிடைக்கவில்லை.’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

# “இந்தியாவுக்கே முன்மாதிரி முயற்சி” முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் குறித்து மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி

சென்னை, ஆக. 13

தமிழ்நாட்டில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அடைதாரர்களின் வீடுகளுக்கே நேரில் ரேசன் பொருட்களை தரும் 'முதல்அமைச்சரின் தாயுமானவர்' திட்டத்தை மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் தொடங்கி வைக்கிறார்.

முன்னதாக இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டிருந்த செய்திக் குறிப்பில் கூறியிருந்ததாவது:

மக்கள் நலன்சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27.797 மாற்றுத்தினாளிகளும், ஆக மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களிலேயே குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள குடும்ப அட்டைகள் மற்றும் பயனாளர்களின் விவரம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையிடமிருந்து பெறப்பட்டு. கள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மின்னணு எடைத்தராசு, ePoS இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாகத் தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர். 70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்குவதால் அரசுக்கு ரூ.30.16 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம். நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதாரத்தை சிறப்புறச் செய்வதுடன் அவர்தம் உணவுப் பாதுகாப்பையும் உறுதிசெய்யும்.

தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்கள்இன்று(12082025)இத்திட்டத்தை சென்னையில் தொடங்கிவைக்கும் வேளையில், மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள். உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்தியாவுக்கே முன்மாதிரி முயற்சி இது என்று 'முதல்அமைச்சரின் தாயுமானவர்' திட்டம் குறித்து மு.க.ஸ்டாலின் வீடியோ வெளியிட்டு நெகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅந்தவீடியோவில், “வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி. முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை 34,809 நியாய விலைக் கடைகளில் செயல்படுத்தப்போகிறோம்.

70 வயதுக்கு மேற்பட்ட 20,42,657 மூத்த குடிமக்கள், 1,27,797 மாற்றுத் திறனாளிகள் என 21,70,454 பேர் இத்திட்டத்தின் மூலம் பயனடையப் போகிறார்கள். இது எனக்கு மனதுக்கு பிடித்த திட்டம். ஒரு திட்டத்தை அறிவித்த உடன் கடமை முடிந்து விட்டதாக நாங்கள் நினைக்கவில்லை. அந்த திட்டத்தின் பலன் கடைக்கோடியில் இருக்கும் கடைசி மனிதனையும் சென்று சேர்கிறதா என்பதையும் கண்காணிக்கிறோம்” என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## மாணவர்கள் எண்ணிக்கை பூஜ்ஜியம் ஆனது: தமிழகத்தில் 207 அரசு பள்ளிகளுக்கு பூட்டு

தமிழகத்தில், 207 அரசு பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை பூஜ்ஜியம் ஆனதால், அப்பள்ளிகள் மூடப்பட்டு வரும் அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. தமிழகத்தில், 31,332 அரசு தொடக்க, நடுநிலைப்பள்ளிகள் உள்ளன. ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை, 18 லட்சத்து 46,550 மாணவ மாணவியர் படிக்கின்றனர். இதில், பல பள்ளிகளில் ஒற்றை இலக்க எண்ணிக்கையில் மாணவர்கள் உள்ளனர். ஒரு மாணவர் படிக்கும் பள்ளிகள் கூட உண்டு. அதுபோன்ற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களை அருகில் உள்ள பள்ளிகளில் சேர்க்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஒரு மாணவர் கூட இல்லாத நிலையில், 207 பள்ளிகள் மூடும் நிலைக்குதள்ளப்பட்டுள்ளன. இதுகுறித்து கல்வி அதிகாரி ஒருவர்கூறியதாவது: நான்கு ஆண்டுகளுக்கு முன், கொரோனாவால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்தது. கொரோனா முடிந்த பின், மீண்டும் தனியார் பள்ளிகளை நோக்கி பெற்றோர் படையெடுத்து வருகின்றனர். இதனால், அரசு பள்ளிகளில் மாணவ மாணவியர் சேர்க்கை குறைந்து வருகிறது. இந்த ஆண்டு, ஒரு மாணவர் கூட படிக்கவில்லை என்பதால், 207 பள்ளிகள் மூடப்பட்டு உள்ளன. மாணவ மாணவியர் எண்ணிக்கை பூஜ்ஜியமாக உள்ள பள்ளிகளின் ஆசிரியர்கள், வேறு பள்ளிக்கு மாற்றப்பட்டு விட்டனர். இப்பள்ளிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இவ்வாறு கூறினார். அரசு பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை, ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வருகிறது. பெரும்பாலும், தங்கள் ஊர்களுக்கு அருகில் பள்ளிக்கு மாற்றல் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், குக்கிராமங்களில் இயங்கும் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையில், ஆசிரியர்கள் ஆர்வம் காட்டுவது கிடையாது. இதனால், பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை குறைந்து பூஜ்ஜியம் நிலைக்கு வந்து விடுகிறது. மாணவர்கள் அதிகம் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் இரு ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். இரண்டு ஆசிரியர்களை வைத்து, ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு எவ்வாறு பாடம் நடத்துவர் என நினைக்கும் பெற்றோர், சமீப காலமாக ஆங்கில வழிக் கல்வி உள்ள தனியார் பள்ளிகளில் குழந்தைகளை சேர்த்து விடுகின்றனர். மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க, அரசு பள்ளிகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கினால் மட்டுமே, அரசு பள்ளிகளை மூடும் நடவடிக்கை எதிர்காலத்திலாவது தவிர்க்கப்படும் என பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்ணாமலையின் சொந்த ஊர் பள்ளி மூடல் தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணா மலையின் சொந்த ஊர் கரூர் மாவட்டம், க.பரமத்தி அருகில் தொட்டம்பட்டியாகும். கடந்த லோக்சபா தேர்தலில், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், உத்துப்பட்டி அரசு தொடக்கப் பள்ளியில் உள்ள ஓட்டுச்சாவடியில், அண்ணாமலை ஓட்டு செலுத்தினார். தற்போது, மாணவர்கள் இல்லாத காரணத்தால், அந்த பள்ளி மூடப்பட்டுள்ளது

## சீர்காழியில் தேசிய நூலக தினம் கொண்டாட்டம்






மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் அமைந்துள்ள ச.மு. இந்து மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உலக நூலக தந்தை சீர்காழி எஸ். ஆர். அரங்கநாதனின் 134 ஆவது பிறந்த தினமான இன்று தேசிய நூலக தினமாக கொண்டாடப்படுகின்றது. இவர் நூலகத்தில் புத்தகங்களை கையாளுவதற்கான கோலான் நூற் பகுப்பாய்வு முறையை கண்டுபிடித்தவர் ஆவார். இவருக்கு நூலகவியலில் செய்த பங்களிப்புக்காக இந்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ விருதினை வழங்கி கௌரவித்தது. இதுபோன்ற பல்வேறு பாராட்டுக்கு உரியவரான இவர் தான் இளம் வயதில் பள்ளி பருவத்தினை சீர்காழியில் 129 ஆண்டு காலமாக கல்வி சேவை ஆற்றி வருகின்ற சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப் பள்ளியில் தன் பள்ளி படிப்பினை முடித்த பெருந்தகைக்கு அப்பள்ளி வளாகத்தில் பள்ளி நிர்வாகத்தின் சார்பில் தனியாக அவருடைய திருவுருவை சிலையை அமைத்துள்ளார்கள். மேலும் பள்ளியில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூலகம் அமைந்துள்ளது இந்த நூலகத்திற்கு எஸ். ஆர் ரங்கநாதன் நூலகம் என பெயரிடப்பட்டு அப்பள்ளியின் மாணவ மாணவிகள் சென்று புத்தகத்தை படிப்பதற்கு ஏதுவாக பள்ளி நிர்வாகம் அமைத்துள்ளது. ஆகவே இவருக்கு நன்றி தெரிவிக்கின்ற வகையில் இன்றைய தினம் உலக நூலக தினமானது அப்பள்ளியில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் எஸ். முரளிதரன் தலைமை ஏற்க, சமு இ மெட்ரிக் பள்ளியின் நிர்வாக அலுவலர் எம்.தங்கவேலு அவர்கள் முன்னிலையில், சீர்காழி வாசகர் வட்ட தலைவர் பாபுநேசன் மாலை அணிவித்து சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் வாசகர் வட்ட முன்னாள் தலைவர் வீரசேணன், பூம்புகார் கல்லூரியின் ஓய்வு பெற்ற பேராசிரியர் விழிநாதன்,,. சீர்காழி அறிவியல இயக்க செயலர் நந்த ராஜேந்திரன், கலை இலக்கிய மன்ற தலைவர் தங்க சேகர், பேராசிரியர் வினோத், ஓய்வு பெற்ற உதவி தலைமை ஆசிரியர் டி.சீனிவாசன் பள்ளி உதவி தலைமை ஆசிரியர் என். துளசிரங்கன், ஆங்கில முதுகலை ஆசிரியர் வி. முருகபாண்டியன், சீர்காழி நூலக அலுவலர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## தனியார் பள்ளிகள் இயக்குனரகம் தெரிவித்துள்ள செய்தியின் அடிப்படையில் கீழ்க்கண்ட 11 கேள்விகளுக்கு தனியார் பள்ளிகள்இயக்குனர் குப்புசாமி பதிலளிப்பாரா?

நேற்றைய தினமலர் செய்திக்கு இன்று தனியார் பள்ளிகள் இயக்குனரகம் தெரிவித்துள்ள செய்தியின்அடிப்படையில் கீழ்க்கண்ட 11 கேள்விகளுக்கு தனியார் பள்ளிகள்இயக்குனர் திரு குப்புசாமி அவர்கள் பதிலளிப்பாரா?

1).அரசு தெரிவித்துள்ள 1717 அங்கீகாரம் இல்லாதபள்ளிகள்செயல்பட்டுவருகிறதாஇல்லையா?

2). அவ்வாறு செயல்படும் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் எவ்வாறு தேர்வு எழுதுகின்றனர்?

3). அங்கீகாரம் இல்லாத பள்ளிகள் மூலம் தேர்வு எழுதிய மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ் செல்லுபடி ஆகுமா?

4). இயக்குனராகத்தால் அங்கீகாரம் வழங்க முடியாத 1717 பள்ளி மாணவர்களை அங்கீகாரம் உள்ள பள்ளிக்கு மாற்ற இயக்குனரகம் எடுத்த நடவடிக்கை என்ன?

5). பள்ளி கட்டிட அனுமதி இல்லாத பள்ளிகளுக்கு 2022 வரை எப்படி அனுமதி வழங்கப்பட்டது?

6). போலி கட்டிட அனுமதி, போலி அங்கீகாரம் ஆணையுடன் செயல்பட்டு வரும் பள்ளிகள் மீது இயக்குனரகம் எடுத்த நடவடிக்கை என்ன?

7). கட்டிட வரைபடம் அனுமதி இல்லாத பள்ளிகளுக்கு எப்படி Form D வழங்கப்பட்டது?

8). நான்கு வகை சான்றுகள் (Form A,B,C; Form D, Sanitary Certificate, Fire NOC) அனுமதி இல்லை என்று இயக்குனரகம் அங்கீகாரம் வழங்காமல் நிராகரிக்க கல்வித்துறையில் சட்டம் உள்ளதா?

9). கட்டிட அனுமதி இல்லாத சில பள்ளிகளுக்கு எந்த விதி தளர்வின் மூலம் தொடர் அங்கீகாரம் 2025 வரை வழங்கப்பட்டுள்ளது?

10). அங்கீகாரம் இல்லாமல் செயல்பட்டு வரும் 1717 பள்ளிகளை மூட இயக்குனரகம் எடுத்த நடவடிக்கை என்ன?

11). யார் சொல் பேச்சு கேட்காத 1717 பள்ளிகள்? அரசகு மாரா பேச்சையா?






## தாராபுரம் நகராட்சி ஆணையாளர் உடன் தாராபுரம் பத்திரிக்கையாளர் சங்கத் தலைவர் சந்திப்பு




திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பகுதியில் தெரு நாய்கள் தொல்லை அதிகரித்து வருகிறது என்று பொதுமக்கள் தாராபுரம் பத்திரிகையாளர் சங்க தலைவர் கருணாநிதி செயலாளர் காஜாமைதீன் ஆகியோருடன் முறையிட்டு வந்தனர் அதன் அடிப்படையில் இன்று தாராபுரம் பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில் தாராபுரம் நகராட்சி ஆணையாளர் முஸ்தபா மற்றும் கால்நடை உதவி இயக்குனர் ராஜமாணிக்கம் ஆகியோரை சந்தித்து தெரு நாய்களை கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வைத்தனர்

# ராமேஸ்வரத்தில் திடீரென உள்வாங்கிய கடல்

ராமநாதபுரம், ஆக. 13

முக்கிய புனித தலங்களில் ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவில் ஒன்றாகும். ஆண்டுதோறும் ஏராளமான பக்தர்கள் இங்கு வந்து செல்கின்றனர். தமிழ்நாடு மட்டுமின்றி வெளிமாநிலங்கள், வெளி நாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். ராமேஸ்வரம் முக்கிய சுற்றுலா தலமாக உள்ளது.



இந்த நிலையில், ராமேசுவரம் துறைமுக கடல் பகுதியில் நேற்று வழக்கத்திற்கு மாறாக கடல் உள்வாங்கி காணப்பட்டது. இதனால் மணல் பரப்பாக தெரிந்த கடற்கரை பரப்பில் தரைதட்டி நின்றது. சிறிது நேரத்தில் இயல்பு நிலைக்கு வந்து விடும் என கடல்வள ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

# வால்பாறையில் கரடி தாக்கி சிறுவன் உயிரிழப்பு

கோவை, ஆக. 13

கோவை மாவட்டம் வால்பாறை அருகே வேவர்லி எஸ்டேட் பகுதி உள்ளது. இங்கு அசாம் மாநிலத்தை சேர்ந்த சொர்பத் அலி மற்றும் அவருடைய மனைவி ரோகமாலா ஆகியோர்தங்கியிருந்து தோட்ட தொழிலாளர்களாகவேலை பார்த்து வருகின்றனர். இவர்களது மகன் நூர்சல் ஹக்(வயது 8). இவன், அங்குள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 2ம் வகுப்பு படித்து வந்தான்.



இந்த நிலையில் நூர்சல் ஹக் தனது வீட்டின் அருகில் உள்ள மற்றொருவரின் வீட்டுக்கு பால் வாங்க சென்றான். அங்கு பால் வாங்கி விட்டு திரும்பி வந்தான். வீட்டுக்கு நடந்து வந்து கொண்டு இருந்த போது, திடீரென அங்கு வந்த கரடி ஒன்று, அவனை தாக்கி அருகில் உள்ள தேயிலை தோட்டத்துக்குள் இழுத்து சென்றது. அங்கு அவனை கடித்துக்கொன்று விட்டு அருகில் உள்ள வனப்பகுதிக்குள் சென்றது. இதற்கிடையில் நீண்ட நேரமாகியும் நூர்சல்ஹக்வீடுதிரும்பாததால் பெற்றோர் தேட தொடங்கினர். அப்போது அந்த பகுதியில் உள்ள தேயிலை தோட்டத்தின் அருகில் பாலும், ரத்தமும் சிதறி கிடந்தது.

உடனே தோட்டத்துக்குள் சென்று பார்த்தபோது உடலில் பலத்த காயங்களுடன் நூர்சல் ஹக் பிணமாக கிடந்தான். இதை கண்டு அவர்கள் கதறி துடித்தனர். தகவல் அறிந்து வால்பாறை வனத்துறையினர், காடம்பாடி போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

# அரசு பள்ளிக்குள் புகுந்து கதவுகளை உடைத்த கரடி: மாணவர்கள், பெற்றோர் அச்சம்

நீலகிரி, ஆக. 13

ஊட்டி, குன்னூர் பகுதிகளில் கடந்த சில நாட்களாக வனவிலங்குகள் ஊருக்குள் வரும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக சாக்லேட் தொழிற்சாலைக்குள் கரடிகள் புகுந்து வருகின்றன. தற்போது குன்னூர் பகுதிகளில் நாவல் பழ சீசன் தொடங்கி உள்ளதால், பழங்களை தேடி கரடிகள் உலா வருகின்றன.

இந்தநிலையில் குன்னூர் அடுத்த மேலூர் ஒசட்டிக்கு கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் கரடி புகுந்து வருகிறது. அங்குள்ள அரசு ஆரம்பப் பள்ளி கதவுகளை உடைத்து உள்ளே நுழைந்து பொருட்களை சேதப்படுத்தி வருகிறது. குறிப்பாக சத்துணவு கூடத்தில் உள்ள எண்ணெய்யை குடிக்கிறது.



இதுகுறித்து அப்பகுதி பள்ளி மாணவர்களின் பெற்றோர் கூறுகையில், கரடி நடமாட்டம் காரணமாக இரவு நேரத்தில் வெளியில் செல்ல முடியாத சூழ்நிலை இருந்தது. தற்போது பள்ளிக்கு அடிக்கடி வந்து செல்லும் கரடியால், பகல் நேரத்தில் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப அச்சமாக உள்ளது. எனவே, அட்டகாசம் செய்து வரும் கரடியை கூண்டு வைத்து பிடித்து வனப்பகுதிக்குள் விட வேண்டும். மேலும் பள்ளியில் சேதப்படுத்தப்பட்டுள்ள கதவுகளை முழுமையாக சீரமைத்து தரவிரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இதுபற்றி வனத்துறையினர் கூறுகையில், மேலூர் ஒசட்டி பள்ளி வனப்பகுதி அருகில் உள்ளதால் கரடி எளிதாக அந்த பகுதிக்கு வருகிறது. பள்ளியில் கதவுகள் பழமையாக உள்ளதால், எளிதாக உடைத்து உள்ளே செல்கிறது. எண்ணெய் வாசனையை வைத்தே பள்ளிக்குள் புகுந்து விடுகிறது. எண்ணெய் உட்பட உணவுப் பொருட்களை பாதுகாப்பான மாற்று இடங்களில் வைக்க வேண்டும். குழு அமைத்து, இரவு நேரங்களில் கண்காணிப்பு பணிகளை தீவிரப்படுத்தி உள்ளோம். உயர் அதிகாரிகள் அனுமதி கிடைத்தால் கரடி கூண்டு வைத்து பிடிக்கப்படும் என்றனர்.

# ராகுல் காந்தி கைது கண்டிக்கத்தக்கது கமல்ஹாசன்

சென்னை, ஆக. 13

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கைதுசெய்யப்பட்டதற்கு மாநிலங்களவை எம்.பி. கமல்ஹாசன் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு;

"நமது வாக்காளர் பட்டியல் மீது கடுமையான கேள்விகள் எழுப்பப்பட்டு உள்ளன. யார் வேண்டுமானாலும் சரி பார்க்கும் வடிவத்தில் வாக்காளர் பட்டியலை வெளியிட ஏன்மறுக்கவேண்டும்? எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக் காட்டும் தரவுகள் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பதிவுகளிலிருந்து தான் எடுக்கப்பட்டுள்ளன எனும் போது, அவரிடமிருந்து எழுத்துப்பூர்வ உறுதிமொழியை ஆணையம் ஏன் கேட்கிறது? மஹாராஷ்டிராவிலும் கர்நாடகாவிலும் சந்தேகத்திற்கிடமான சேர்க்கைகள் அம்பலப்படுத்தப்படும்போது, பீஹாரில் இப்போது சிறப்புத் தீவிரத் திருத்தம் என்னும் பெயரில் (ஸ்பெஷல் இன்டென்ஸிவ் ரிவிஷன்) பெருமளவிலான நீக்கல்கள் ஏன் செய்யப்படுகின்றன?




என்னுடைய சகோதரர் ராகுலும், இண்டி கூட்டணியின் எம்பிக்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்பிக்கள், மக்களின் உரிமைகளுக்கான கோரிக்கைகளை எழுப்பி, ஜனநாயகத்தின் மக்கள் மன்றமான பார்லிமென்டில் இருந்து தேர்தல் ஆணையம் வரை அமைதியாக நடந்து சென்றதற்காக கைது செய்யப்பட்டனர்.

வெளிப்படைத்தன்மை வேண்டும் என்பதற்காகப் போராடிய மக்கள் பிரதிநிதிகளை கைது செய்வது ஜனநாயகத்தையே ஸ்தம்பிக்கச் செய்வதற்குச் சமம். விடுதலையடைந்த முதிர்ச்சியுற்ற குடியரசு நாட்டில் நடக்கக் கூடாத சம்பவம் இது. வாக்களிப்பின் உண்மைத்தன்மை கேள்விக்குறியாகும்போது, அது வெறும் ஒரு சிறிய அரசியல் சச்சரவு அல்ல, சுதந்திரம், கண்ணியம் மற்றும் நீதியின் பால் நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு இந்தியருக்கும் இஃதொரு தார்மீக நெருக்கடி.

வாக்குச் செலுத்திய வாக்காளர் பட்டியல்களை இயந்திரத்தால் வாசிக்க முடிகிற வடிவத்தில் வெளியிடுங்கள். அந்தப் பட்டியல்கள் தன்னிச்சையாக ஆய்வு செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். அதிகாரத்தின் வார்த்தைகளால் சொல்வதை விட, மக்களே உண்மையை நேரடியாகப் பார்க்கட்டும்.

இது ஏதோ ஓர் அரசியல் கட்சியின் பிரச்னை அல்ல. ஒட்டுமொத்த இந்தியாவின் பிரச்னை. பாஜ கூட்டணியில் உள்ள சகோதரர்கள் உள்பட அனைத்து அரசியல் கட்சிகளையும், வெளிப்படைத் தன்மைக்காக ஒன்றுபடுமாறு நான் அழைக்கிறேன்.

இந்தக் கோரிக்கையை, கிராமம் முதல் நகரம் வரை இந்தியாவின் ஒவ்வொரு மூலைக்கும் எடுத்துச் செல்வோம்.

இது நமது வாக்குகளைப் பாதுகாக்கவும், நம் குடியரசைப் பாதுகாக்கவும் நாம் செய்ய வேண்டிய செயலாகும்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 4 ஐபிஎஸ் அதிகாரிகளை மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஆக. 13

தமிழகத்தில் பணியாற்றி வரும் 4 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவுபிறப்பித்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு;

★ டான்ஜெட்கோ தலைமை விழிப்புணர்வு அதிகாரியாக இருந்த டிஜிபி பிரமோத்குமார், சென்னை ஊர்க்காவல்படை டிஜிபி ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

★ சென்னை ஊர்க்காவல் படை ஐஜி ஆக இருந்த ஜெயஸ்ரீ, மாநில குற்ற ஆவண காப்பக ஐஜி ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளார். ★ சென்னை, குற்ற ஆவண காப்பக ஏடிஜிபி ஆக இருந்த ஆயுஷ் மணி திவாரி, டான்ஜெட்கோ லஞ்ச ஒழிப்பு துறை தலைமை விழிப்புணர்வு அதிகாரி ( ஏடிஜிபி) ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.




★ திருச்சி சரக டி.ஐ.ஜி. வருண் குமார், சென்னை சிபிசிஐடி டி.ஐ.ஜி. ஆக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# பழனியில் இளைஞரை அடித்துக்கொன்ற வடமாநில சிறுமி... உடந்தையாக இருந்த தந்தை அதிர்ச்சி சம்பவம்

திண்டுக்கல், ஆக. 13

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே தும்பலப்பட்டி கிராமத்தில் செங்கல் சூளை உள்ளது. இந்த செங்கல் சூளையில் அதே பகுதியை சேர்ந்த சரவணன் (வயது 23) என்ற இளைஞர் கணக்காளராக வேலை செய்து வந்தார்.

இதனிடையே, நேற்று முன் தினம் இரவு செங்கல் சூளைக்கு சென்ற வீடு திரும்பவில்லை. இதனால் அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் மறுநாள் காலை செங்கல் சூளைக்கு சென்று பார்த்தனர். அப்போது அங்கு சரவணன் காதில் ரத்தம் வடிந்த நிலையில் சடலமாக கிடந்துள்ளார்.





இது குறித்து தகவலறிந்த போலீசார், விரைந்து சென்று சரவணனின்உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். முதற்கட்ட விசாரணையில் சரவணன் அடித்துக்கொலை செய்யப்பட்டது தெரியவந்தது.

இந்நிலையில், சரவணன் அடித்துக்கொன்றது அதே செங்கல்சூளையில்வேலை செய்துவந்த 16 வயதான வடமாநில சிறுமி என்பது தெரியவந்து. செங்கல் சூளையில் வேலை செய்து வந்த வடமாநில தொழிலாளியான கோபால் என்பவரின் மகளான 16 வயது சிறுமி சரவணனை அடித்துக்கொன்றுள்ளார்.

மேலும், இந்த கொலையை மறைக்க சிறுமியின் தந்தையான கோபால் மற்றும் சிறுமியின்சகோதரி (வயது 14) ஆகியோரும் உடந்தையாக இருந்துள்ளனர்.

இதையடுத்து, கோபால் மற்றும் அவரது மகள்களான 2 சிறுமிகளையும் போலீசார்கைது செய்துள்ளனர். சரவணனை வடமாநில சிறுமி கொலை செய்ததற்கான காரணம் குறித்து இதுவரைதகவல் இதுவரை வெளியாகவில்லை.

# திருச்செந்தூர் கோவிலில் மண்டல பூஜை நிறைவு; ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்

தூத்துக்குடி ஆக. 13

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கடந்த மாதம் 7ந்தேதி மகா கும்பாபிஷேக விழா நடந்தது. மறுநாள் முதல் கோவிலில் மண்டல பூஜைகள் தொடர்ந்து நடைபெற்றது. தினமும் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வந்தனர். மொத்தம் 35 நாட்கள் நடைபெற்ற மண்டல பூஜைக்கான நிறைவு விழா இன்று நடந்தது.

இதையொட்டி கோவில் சண்முக விலாச மண்டபம், மகா மண்டபம் போன்ற அனைத்து பகுதிகளும் கரும்பு, பழங்கள் மற்றும் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டது.அதிகாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, 5.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, காலை 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடந்தது. 7 மணிக்கு கோவில் உள்பிரகாரத்தில் உள்ள தங்க கொடி மரம் அருகே கரியமாணிக்க விநாயகர், மூலவர், வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களுக்கு கும்பங்கள் வைக்கப்பட்டு யாகபூஜைகள் நடந்தது.



அதேபோல் கந்தசஷ்டி யாகசாலை மண்டபத்தில் உள்ள சுவாமி சண்முகருக்கும், பெருமாள் சன்னதியில் பெருமாளுக்கும், குமாரவிடங்க பெருமான் சன்னதி பரிவாரமூர்த்தி தெய்வங்களுக்கும் கும்பங்கள் வைக்கப்பட்டு யாக பூஜைகள் நடைபெற்றது.

காலை 9.05 மணிக்கு பூர்ணாகுதி, மகா தீபாராதனை நடந்தது. பூஜை செய்யப்பட்ட கும்பங்கள் அந்தந்த சுவாமி சன்னதிகளுக்கு எடுத்து வரப்பட்டது. முதலில் வள்ளி, தெய்வானை அம்பாள்களுக்கு கும்பநீரால் அபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து மூலவர், சண்முகர், பெருமாள் உள்ளிட்ட பரிவார மூர்த்தி தெய்வங்களுக்கு கும்பநீரால் அபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடந்தது.

மாலை 4 மணிக்கு சாயரட்சைதீபாராதனைக்கு பின்னர் சுவாமி குமரவிடங்கப்பெருமான், வள்ளி அம்பாள் தனித்தனி தங்கமயில் வாகனத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுத்தனர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# முதல்அமைச்சர் கோப்பை: விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வீரர்களுக்கு உதயநிதி ஸ்டாலின் அழைப்பு

சென்னை, ஆக. 13

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று (11.8.2025) பெரும்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சனின் தொகுதி மேம்பாட்டு நிதி உள்பட ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலைஞர் கலையரங்கத்தினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை

நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் வில்சனுடைய பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, அதுமட்டும் அல்லாமல், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும நிதி ஆகியவற்றின் மூலம், இந்த பெரும்பாக்கம் அரசுக் கல்லூரியில் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 'கலைஞர்கலையரங்கத்தை உங்களோடு சேர்ந்து திறந்து வைப்பதில் மிகுந்த பெருமையடைகின்றேன், மகிழ்ச்சி அடைகின்றேன்.



விளையாட்டுங்கிறது உங்க உடல் நலத்துக்கு மட்டுமல்ல, மனநலத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் மிக, மிக முக்கியம். இந்தக் கல்லூரியில நிறைய விளையாட்டு வீரர்கள் உருவாகி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கேட்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. அதே போல்,தங்கைகள்தாரணி, ராஜலட்சுமி, தம்பி சக்தி வேஷ் போன்றவர்கள் சிலம்பம் விளையாட்டுல இன்றைக்கும் பல சாதனைகளை தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்கள். இதெல்லாம் கல்லூரிக்கு மட்டுமல்ல, நம்முடைய மாநிலத்திற்கே மிகப் பெரிய பெருமை.

நம்முடைய விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பாக முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை ஒவ்வொரு வருடமும் நடத்திக் கொண்டிருக்கிறோம்.ஆகவே, இங்கே ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்கள், (SDAT) இணையத்தளத்துல வர்ற 16 ஆம் தேதிக்குள்ள முன் பதிவு செய்து கொள்ளுங்கள். உங்களோட கல்வித்திறமையையும், பன்முகத்திறமையையும் நீங்க தொடர்ந்து வளர்த்துகிட்டே இருங்கள். உங்க கல்லூரியோட வளர்ச்சிக்கும், மாணவர்கள் உங்களோட முன்னேற்றத்துக்கும் நம்முடைய திராவிட மாடல் அரசு என்றைக்கும் துணைநிற்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அண்டை மாநில தமிழ்ச் சங்கங்களுக்கு வழங்கப்படும் தமிழ்ப் பாடநூல்களை நிறுத்துவதா? டி.டி.வி. தினகரன் கண்டனம்

சென்னை ஆக. 13

அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களுக்கு வருடந்தோறும் விலையில்லாமல் வழங்கப்பட்டு வந்த தமிழ்ப் பாடநூல்கள், நடப்பாண்டு முதல் நிறுத்தப்படுவதாக தமிழக அரசு அறிவித்திருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

நிதி நெருக்கடி எனக் கூறி எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் தமிழக அரசு எடுத்திருக்கும் இந்த திடீர் முடிவால் டெல்லி, மும்பை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் தமிழ்ச் சங்கங்கள் நடத்தி வரும் தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாடநூல்கள் வழங்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் தமிழ் ஆட்சிக்காலம் நடைபெற்று வருவதாக மேடைதோறும் பெருமை பேசிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், மறுபுறம் அண்டை மாநிலங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு பாடநூல்களை கூட விலையில்லாமல் வழங்க மறுத்திருப்பது



தமிழ் மீதான தி.மு.க. அரசின் போலிப்பற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.

முதல் அமைச்சரின் புகழ்பாடவும், அவர் செல்லும் இடங்கள் எல்லாம் விளம்பரம் செய்யவும் பல நூறு கோடி ரூபாயை செலவு செய்யும் போதெல்லாம் ஏற்படாத நிதி நெருக்கடி, அண்டை மாநிலங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு பாடநூல்களை வழங்கும்போது மட்டும் ஏற்படுகிறதா? என்ற கேள்வி அனைவரின் மத்தியிலும் எழுந்துள்ளது.

எனவே, வெளி மாநிலங்களில் தமிழ் மொழியை வளர்த்தெடுப்பதில் தொய்வை ஏற்படுத்தியிருக்கும் இந்த முடிவை உடனடியாக திரும்பப் பெறுவதோடு, வழக்கம்போலஅண்டை மாநில தமிழ்ச் சங்கங்களுக்கு வழங்க வேண்டிய தமிழ்ப் பாடநூல்களை தங்கு தடையின்றி வழங்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவில் தங்கத் தேருக்கு தங்க தகடு பதிக்கும் பணிகள்: அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்

சென்னை, ஆக. 13

சென்னை, நங்கநல்லூர் ஆதிவ்யாதிஹரபக்த ஆஞ்சநேயர் கோவிலில் புதிய தங்கத் தேருக்கு 9.5 கிலோ எடை கொண்ட தங்கத்தை கொண்டு தங்கத் தகடு பதிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இப்பணியை தமிழக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.




பின்னர், அமைச்சர் சேகர்பாபு நிருபர்களிடம் கூறுகையில், நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவிலுக்கு ரூ.8 கோடி மதிப்பில் புதிய தங்கத்தேர் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. புதிய தங்கத்தேருக்கு ரூ.35 லட்சம் மதிப்பில் மரத்தேர் செய்யப்பட்டு, அதற்கு ரூ.12.31 லட்சம் செலவில் செப்புத்தகடு வேயும் பணி நிறைவு பெற்றுள்ளது. தொடர்ந்து உபயதாரர் பங்களிப்போடு 9 கிலோ 500 கிராம் எடை கொண்ட தங்கத்தை கொண்டு தங்க தகடு பதிக்கும்பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது" என்றார்.

# திருவாரூரில் ஆற்றில் மூழ்கி 4 பேர் பலி



திருவாரூர், ஆக. 13

திருவாரூரில் கீழ்க்குடி பகுதியில்உள்ளபுத்தாற்றில் குளிப்பதற்காக காரை நிறுத்திவிட்டு 4 இளைஞர்கள் குளிக்கச் சென்றனர். அபோது நீர் வரத்து திடீரென அதிகரித்தது.

இதன் காரணமாக 4 பேரும் தண்ணீரில் தத்தளித்தனர். ஒரு கட்டத்திற்கு மேல் மூச்சு திணறி 4 பேரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இதனையடுத்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

நீரில் மூழ்கி உயிரிழந்த 4 பேரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் உயிரிழந்தவர்களின் விவரங்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் உயிரிழந்த 4 பேரும் நன்னிலம் வில்லியனூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என கூறப்படுகிறது. குளிக்கச் சென்ற இடத்தில் நீரில் மூழ்கி 4 இளைஞர்கள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## ஜலகாம்பாறை நீர்வீழ்ச்சியில் வெள்ளப்பெருக்கு பொதுமக்கள் குளிக்க தடை விதிப்பு

திருப்பத்தூர், ஆக. 13

தென்னிந்திய கடலின் மேற்பரப்பில் வணிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால் தமிழகத்தில் பரவலாக மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. அதன்படி பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.

அதன்படி திருப்பத்தூர் மாவட்டத்தில் 2 நாட்களாக கனமழை பெய்து வருகிறது. திருப்பத்தூர் பகுதியில் பெய்த தொடர் கனமழையின் காரணமாக ஜலகாம்பாறை நீர்



வீழ்ச்சியில் நீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

மேலும் நீர்வீழ்ச்சிக்கு செல்லும் பாதையில் மண் சரிவும் ஏற்பட்டுள்ளது . இதனால் சுற்றுலா பயணிகள் நீர்வீழ்ச்சியில் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

## 79வது சுதந்திர தினத்தையொட்டி, சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு

சென்னை, ஆக. 13

79வது சுதந்திர தின விழா வரும் 15ம் தேதி நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடபட உள்ளது. சுதந்திர தின விழா கொண்டாட்டங்களைசீர்குலைக்க முயற்சி நடைபெறாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்கள், வழிபாட்டு தளங்கள், மக்கள் அதிகமாக கூடும்முக்கியமானரெயில், பஸ் நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளன.



இந்தநிலையில், 79வது சுதந்திர தினத்தையொட்டி, சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தீவிர கண்காணிப்பில் போலீசார் ஈடுபட்டுள்ளனர். உள்நாட்டு பயணிகள் ஒன்றரை மணி நேரமும்,

சர்வதேச பயணிகள் மூன்றரை மணி நேரமும் முன்னதாக வர அறிவுறுத்தப் பட்டுள்ளது.

## சிறு துறைமுகத் திட்டங்களை விரைவில் செயல்படுத்த வலியுறுத்தி மத்திய மந்திரியிடம் வேலு மனு

சென்னை, ஆக. 13

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, இன்று (11.8.2025) புது டெல்லி டிரான்ஸ்போர்ட் பவனில், மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனாவாலை சந்தித்து, சாகர்மாலா திட்டத்தின் கீழ் திட்டங்களை விரைவாக செயல்படுத்தவும், நிதி வழங்கவும் வலியுறுத்தினார்.

ராமேஸ்வரம் (இந்தியா) மற்றும் தலைமன்னார் (இலங்கை) இடையே சர்வதேச பயணிகள் கப்பல் சேவையைத் தொடங்குவதற்காக ராமேஸ்வரம் துறைமுகத்தில் சாகர்மாலா திட்டத்தின்கீழ், தமிழ்நாடு துறைகங்களின் உள்கட்டமைப்பு மேம்பாடு செய்வது குறித்து கோரினார்.

ராமேஸ்வரம் ஒரு புனித யாத்திரைத் தலமாகும். மேலும் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2 கோடி பக்தர்கள் / சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இத்துறைமுகத்தில் அடிப்படை உள்கட்டமைப்பை மேம்படுத்துவது உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் சர்வதேச படகு சேவையையும் ஊக்குவிக்கும் என்று அமைச்சர், மத்திய அமைச்சரிடம் எடுத்து கூறினார்.

ராமேஸ்வரம் துறைமுகத்தில் ரூ.118 கோடி திட்ட செலவில், 250 மீட்டர் நீளமுள்ள அணுகு தோணித்துறை, சர்வதேச பயணிகள் முனையம் போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT) உள்ள துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் கடற்கரைகளுக்கான தேசிய தொழில்நுட்ப மையம் (NTCPWC) தயாரித்துள்ளது. இதன் மூலம் ராமேஸ்வரம் (இந்தியா) முதல் தலைமன்னார் (இலங்கை) இடையிலான 26 கடல் மைல் (48 கிலோமீட்டர்) தூரத்திற்கு



சர்வதேச பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்க முடியும் என்று தெரிவித்தார்.

மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்களின் வருகை அதிகரிப்பதுடன், பல்வேறு வேலைவாய்ப்புகள் உருவாகுவதுடன், இம்மாவட்டத்தின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெரும்பங்காற்றும் என்றும் மத்திய அமைச்சரிடம் எடுத்துரைத்தார்கள்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து, மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறைச் செயலாளர் ராமச்சந்திரனையும், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள்.

இந்த சந்திப்பின்போது, தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி விஜயன், தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை கூடுதல் தலைமை செயலாளர் மங்கத்ராம் சர்மா, தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச்செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தி.ந.வெங்கடேஷ், தமிழ்நாடு அரசின் உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் குமார், மற்றும் நெடுஞ்சாலைத்துறைசிறப்பு தொழில்நுட்ப அலுவலர் ரா.சந்திரசேகரும் உடனிருந்தனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆணவ கொலைக்கு எதிராக விஜய் குரல் கொடுக்காதது ஏன்? திருமாவளவன் கேள்வி



பெரம்பலூர், ஆக. 13

தொடர் ஆணவ படுகொலைகள் செய்யப்படுவதை கண்டித்து பெரம்பலூர்அரியலூர் மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் பெரம்பலூர் புதிய பஸ் நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் தலைமை தாங்கி பேசியதாவது:

ஆணவ கொலைகளை தடுக்க சிறப்பு சட்டத்தை தமிழக அரசு உடனடியாக இயற்றிட வேண்டும். மென்பொறியாளர் கவின் செல்வகணேஷ் ஆணவ கொலை வழக்கை சிறப்பு புலனாய்வு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். அவரது குடும்பத்திற்கு ரூ.1 கோடி இழப்பீடு வழங்குவதோடு, அவரது தம்பிக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

ஆணவ கொலைகள் தடுப்பு சட்டத்தை தேசிய அளவில் மத்திய அரசு இயற்றிட வேண்டும். இந்த ஆணவ படுகொலைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து, இந்த படுகொலைகளை செய்யக்கூடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி 40 ஆண்டுகளாக விடுதலை சிறுத்தைகள் கட்சி போராடுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான இந்த ஆணவ படுகொலைகள் நடக்கிறபோது பெரிய கட்சிகளும், புதிய கட்சிகளும் வாய் திறப்பதில்லை.

நடிகர் விஜய்யால் இந்த ஆணவ படுகொலையை கண்டிக்கக்கூட முடியவில்லை. தி.மு.க. அரசை கடுமையாக விமர்சிக்கிற அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியால் இந்த ஆணவ படுகொலையை கண்டிக்க முடியவில்லை. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் வாக்குகள் மட்டும் அ.தி.மு.க.விற்கு வேண்டும். ஆனால் அவர்களுக்காக அ.தி.மு.க. பேசுவதில்லை. இன்றைக்கு இந்த ஆணவ படுகொலையை விவாதிக்கக்கூடிய அளவுக்கு சூழ்நிலையை விடுதலை சிறுத்தைகள் கட்சி தான் உருவாக்கி உள்ளது. ஆணவ கொலைகள் காலம் காலமாக இருக்கிறது.

கவினை ஆணவ படுகொலை செய்ததை சிலர் நியாயப்படுத்தி பேசுகிறார்கள். விடுதலை சிறுத்தைகள் கட்சி மீது அபாண்டமான பலியை சுமத்துகிறார்கள். அவதூறு பரப்புகிறார்கள். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா இருந்தபோது பா.ஜனதா போன்ற தேசிய கட்சிகள் தமிழகத்தில் காலூன்ற முடியவில்லை. அண்ணா, கருணாநிதி ஆகியோரின்துணிச்சல் ஆணவ கொலைகளை தடுக்க சிறப்பு சட்டம் இயற்றிட தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வர வேண்டும் என்பதற்காக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

இந்த சட்டத்தை முதல்அமைச்சர் கொண்டு வந்தால் இந்திய அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தலைவராக பரிணாமம் பெற முடியும். பல மாநிலங்களுக்கு வழிகாட்டக்கூடிய முன்மாதிரி அரசை நீங்கள் நடத்துகிறீர்கள் என்று வரலாற்றில் பதிவாகும். இவ்வாறு அவர் பேசினார்.

## தமிழகத்தில் அதிகரிக்கும் மின் தேவை: கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்ய எடுத்த முயற்சிகள் என்ன? மத்திய மந்திரி பதில்


புதுடெல்லி, ஆக. 13

தமிழகத்தில் அதிகரித்து வரும் மின் தேவையை கணக்கில்கொண்டு கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்ய மத்திய அரசு எடுத்த முயற்சிகள் என்ன? இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தை முறையாகப் பயன்படுத்த கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார். இதற்கு பதிலளித்து மத்திய மின்சாரத்துறை இணை மந்திரி ஸ்ரீபாத் நாயக் தெரிவித்ததாவது:

தமிழகத்தின் தற்போதைய மின் உற்பத்தி திறன் 43,107 மெகாவாட்டாக இருக்கிறது. அடுத்த மூன்றாண்டுகளில் இதை அதிகப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, அடுத்த மூன்றாண்டுகளில் அனல் மின்நிலையங்கள் மூலம் கூடுதலாக 3,440 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். அதே காலகட்டத்தில் அணுமின் நிலையங்கள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தில் தமிழகத்தின் பங்காக 2,152 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். அடுத்த மூன்றாண்டுகளில் புதுப்பிக்கத்தக்க மின்சாரம் மூலம் கூடுதலாக 6 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும்.

இப்படி தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் மிகை மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பவும், அவசர காலத்தில் பிற மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு மின்சாரத்தை எடுத்து வரும் வகையிலும் மின் பாதைகள் மற்றும் அதற்கான இணைப்பு ஏற்பாடுகள் இதர தென் மாநிலங்களுடனும், மத்திய தொகுப்புடன் நல்ல முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மின் உற்பத்தி துறையில் குறிப்பாக புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியில் முதலீட்டை ஊக்கப்படுத்த மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இதற்காக அடுத்த ஐந்தாண்டுகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் திட்டங்களை வகுத்துள்ளது. இந்த விஷயத்தில் முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாநிலங்களுக்கிடையே மின்சாரத்தை எடுத்துச்



செல்ல வசூலிக்கப்பட்டு வந்த கட்டணம் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தியை, மாநிலத்துக்குள்ளேயே பிற இடங்களுக்கும்; பிற மாநிலங்களுக்கும் எடுத்துச் செல்ல மின் தொடரமைப்பில் கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதிகளை செய்துகொடுத்த பின்பு, மின் உற்பத்தியில் 100 சதவீத அந்நிய முதலீட்டை சுலபமாக அனுமதிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கென சம்பந்தப்பட்ட அமைச்சகத்தில் தனிப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியை தங்கு தடையின்றி மேற்கொள்ள தேவையான துணை மின் நிலையங்கள், மின் தொடரமைப்பு கட்டமைப்புகளை உருவாக்க பசுமை எரிசக்திப் பாதைத் திட்டம் என்ற சிறப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்தில் கடற்கரையில்லாத இடங்களில் 500 மெகாவாட் காற்றாலை மின்சாரம் உற்பத்தி செய்ய தனித்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர மின் உற்பத்தியில் தனியார் பங்களிப்பை ஊக்கப்படுத்த தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 100 கிலோவாட் முதல் 10 மெகாவாட் வரையிலான நீரேற்று மின் உற்பத்தி மற்றும் நீர் மின் நிலையங்களை அமைக்க தமிழ்நாடு அரசு தனிக் கொள்கைகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

மொத்தம் 13,500 மெகாவாட் திறன் கொண்ட நீரேற்று மின் திட்டங்களை தமிழ்நாடு அரசு தனியார் மற்றும் அரசின் பங்களிப்போடு செயல்படுத்தி வருகிறது. இதை மேலும் அதிகப்படுத்த தகுதியான தனியார் நிறுவனங்களையும் தமிழ்நாடு அரசு அடையாம் கண்டு, அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இவ்வாறு மந்திரி ஸ்ரீபாத் நாயக் தெரிவித்தார்.

## முதலீடுகளின் நிலை என்ன..? வெள்ளை அறிக்கை வெளியிட்டு, மு.க.ஸ்டாலின் வெளிநாடு செல்லட்டும் அன்புமணி

சென்னை, ஆக. 13

பா.ம.க. தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டிற்கான தொழில் முதலீடுகளைத் திரட்டுவதற்காக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான குழு இம்மாத இறுதியிலோ அல்லது அடுத்த மாதத் தொடக்கத்திலோ இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்லவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த காலங்களில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 5 நாடுகளில் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்கள் படுதோல்வியடைந்து விட்ட நிலையில், மக்களின் வரிப் பணத்தை வீணடித்து இன்னொரு பயணம் தேவையா? என்ற வினாவுக்கு அவர் விடையளிக்க வேண்டும்.

எந்தவொரு மாநிலமும் தொழில்துறையில் வளர்ச்சி அடைந்தால் தான் பொருளாதாரத்தில் முன்னேற முடியும்; வேலைவாய்ப்புகளை பெருக்க முடியும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. ஆனால், புதிதாக எந்தவொரு திட்டத்தையும் மேற்கொள்வதற்கு முன்பாக, கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அதே போன்ற திட்டங்களால் ஏற்பட்ட பயன்கள் என்ன? என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டியது அவசியம்.

அதேபோல், விரைவில் இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதற்கு முன்பாக அதற்கு முந்தைய வெளிநாட்டு பயணங்களின்மூலம்தமிழ்நாட்டிற்கு கிடைத்த நன்மைகள் என்ன? என்பது குறித்து ஆராய வேண்டும். கடந்த 2022&ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 நாள் பயணமாக துபாய் சென்ற முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், அங்குள்ள நிறுவனங்களிடம் நடத்திய பேச்சுகளின் அடிப்படையில், லூலூ நிறுவனம் மூலம் ரூ.3500 கோடி, நோபுள் ஸ்டீல்ஸ் ரூ.1000 கோடி, ஒயிட்ஹவுஸ் ரூ.500 கோடி உட்பட மொத்தம் ரூ.6100 கோடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இந்த முதலீடுகளின் வாயிலாக 15,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அது நடக்கவில்லை.



அதன்பின் 2023&ஆம் ஆண்டுமேமாதம்சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளில் முதல்அமைச்சர் மேற்கொண்ட பயணத்தில் ரூ.1342 கோடிக்கான முதலீட்டு ஒப்பந்தங்கள்கையெழுத்திடப்பட்டன. அவற்றின் மூலம் 2000 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று கூறப்பட்டது. ஆனால், அதில் எந்த முன்னேற்றமும் இல்லை.

2024&ஆம் ஆண்டு ஜனவரி இறுதியில் ஸ்பெயின் நாட்டில் 14 நாள்கள் பயணம் மேற்கொண்ட மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஹபக்லாய்டு நிறுவனம் ரூ.2500 கோடி, எடிபன் நிறுவனம் ரூ. 540 கோடி, ரோக்கா நிறுவனம் ரூ. 400 கோடி என மொத்தம் ரூ. 3,440 கோடி தொழில் முதலீடுகள் கையெழுத்திடப் பட்டன. இதில் ஒரு ரூபாய் கூட இன்னும் வரவில்லை; அதனால் யாருக்கும் வேலைவாய்ப்பும் கிடைக்கவில்லை.

2024&ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்கா சென்ற முதல் அமைச்சர் மு.ஸ்டாலின் அவர்கள் மொத்தம் 17 நாள்கள் பயணமாக சென்றார். இப்பயணத்தின் போது ரூ.7616 கோடிக்கும் முதலீடுகள் திரட்டப்பட்டதாகவும் அதன்மூலம் 11,516 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்றும் கூறப்பட்டது. ஆனால், நடக்கவில்லை.

இதுவரை 4 கட்டங்களாக 5 நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவற்றின் மூலம் மொத்தம் ரூ.18,498 கோடி முதலீடு கிடைக்கும்; ஸ்பெயின் தவிர்த்த பிற நாடுகளிலிருந்து கிடைக்கும் முதலீடுகளின் வாயிலாக மட்டும் 28,516 பேருக்கு முதலீடு கிடைக்கும் என்று கூறியிருந்தார்.

ஆனால், முதல்அமைச்சர் உறுதியளித்தவாறு எதுவும் நடக்கவில்லை என்பதால், கடந்த காலங்களில் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட அனைத்து வெளிநாட்டு பயணங்களும் தோல்வியடைந்து விட்டதாகவே கருத வேண்டியுள்ளது.

அதுமட்டுமின்றி, உள்நாட்டில் திரட்டப்பட்டதாகக் கூறப்படும் முதலீடுகளின் நிலையும் திருப்தியளிப்பதாக இல்லை. அண்மையில், தூத்துக்குடியில் நடத்தப்பட்ட மண்டல முதலீட்டாளர்கள் மாநாடு உள்பட கடந்த நான்கரை ஆண்டுகளில் மொத்தம் ரூ.10.62 லட்சம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டதாகவும், அவற்றின் மூலம் 32.78 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதில் 10 சதவீதம் கூட தொழில் திட்டங்களாக மாற்றப்படவில்லை. 5 விழுக்காடு அளவுக்குக் கூட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை.

மேலும் தமிழக அரசு கூறும் தரவுகளின் அடிப்படையில் பார்த்தாலும் கூட, கடந்த நான்கரை ஆண்டுகளில் மொத்தம் 10.62 லட்சம் கோடி தொழில் முதலீடுகளை ஈர்க்க ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டுள்ளன. ஆனால், வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டதன் மூலம் ஈர்க்கப்பட்ட முதலீடு வெறும் ரூ.18,498 கோடி தான்.

இது மொத்தமாக கையெழுத்திடப்பட்ட முதலீட்டு ஒப்பந்தங்களின் மதிப்பில் வெறும் 1.72 சதவீதம் மட்டும் தான். தமிழக அரசு வெளியிட்ட தரவுகளின் படி பார்த்தாலும் கூட முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களின் வரிப்பணத்தில் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்கள் படுதோல்வி என்பது உறுதியாகிறது.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனிக்கு மேற்கொள்ளவிருக்கும் பயணத்தை நியாயப்படுத்த வேண்டும். அதற்காக தமிழ்நாட்டில் இதுவரை மொத்தம் எவ்வளவு முதலீடு திரட்டப்பட்டுள்ளது? முதல்அமைச்சரின் வெளிநாட்டு பயணங்களின் வாயிலாக எவ்வளவு முதலீடு திரட்டப்பட்டுள்ளது.

இவற்றில் எவ்வளவு முதலீடுகள் தொழிற்சாலைகளாக மாறியுள்ளன? எவ்வளவு பேர் வேலை பெற்றுள்ளனர்? என்பது குறித்த வெள்ளை அறிக்கையை முதல்அமைச்சர் வெளியிட வேண்டும். அதன்பிறகே முதல்அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் எந்தவொரு நாட்டுக்கும் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று மக்களின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பீகாரில் நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்களை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் எஸ்டிபிஐ கட்சி

சென்னை, ஆக. 13

பீகாரில் 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கிய விவரங்களை வெளியிட மறுத்த தேர்தல் ஆணையத்தின் முடிவுக்கு எஸ்டிபிஐ கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் இலியாஸ் தும்பே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆகஸ்ட் 9, 2025 அன்று சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில், சிறப்பு தீவிர திருத்தம் (SIR) முதல் கட்டத்திற்குப் பின் இந்த மறுப்பு தெரிவிக்கப் பட்டது.

இது ஜனநாயகக் கோட்பாடுகளையும், இந்திய அரசியலமைப்பின் 326வது பிரிவில் உறுதியளிக்கப்பட்ட வாக்குரிமையையும் மீறுவதாக உள்ளது. பெயர்கள் மற்றும் நீக்கக் காரணங்களை வெளியிடுவது கட்டாயமில்லை என்ற ஆணையத்தின் வாதம் பொறுப்புணர்வைத் தவிர்க்கும் பலவீனமான வாதமாகும்.

இது தலித்துகள், முஸ்லிம்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், பெண்கள் போன்ற ஒதுக்கப்பட்ட சமூகங்களை குறிவைத்து வாக்குரிமையைப் பறிக்கும் முயற்சியாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

எஸ்டிபிஐ, சிறப்பு தீவிர திருத்தம் (SIR)இன் தன்னிச்சையான மற்றும் பாகுபாடு நிறைந்த தன்மையை எதிர்த்து வருகிறது, இது ஜூன் 30 மற்றும் ஜூலை 9, 2025 அறிக்கைகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2.93 கோடி வாக்காளர்களிடம் கடுமையான ஆவணச் சான்றுகளைக் கோருவது—ஆதார், வாக்காளர் அடையாள அட்டைகளுக்கு அங்கீகாரம் மறுப்பது—ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு பாகுபாடு நிறைந்த பளுவை ஏற்படுத்துகிறது. பீகாரில் வெறும் 2.8% மக்களுக்கு மட்டுமே பிறப்புச் சான்றிதழ் உள்ளதாக தேசிய குடும்ப நல ஆய்வு தரவுகள் கூறுகின்றன, இது வாக்குரிமையைப் பறிக்கும் திட்டமிட்ட தடையாக உள்ளது.

சுப்ரீம் கோர்ட்டு மேற்பார்வையில் இருந்தும், விலக்கப்பட்ட வாக்காளர்களின் பட்டியலை வெளியிடாதது வெளிப்படைத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறது. இது தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) மறைமுகமாக அமல்படுத்தப்படுவதாக எதிர்க்கட்சிகள் மற்றும் குடிமைச் சமூகத்தினர் அஞ்சுவதை உறுதிப்படுத்துகிறது.

எஸ்டிபிஐ, 65 லட்சம் விலக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் மற்றும் நீக்கக் காரணங்களை உடனடியாக வெளியிடவும், இயற்கை நீதிக் கோட்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கவும் கோருகிறது. மழைக்காலம் மற்றும் உயர் புலம்பெயர்வு சூழலில் அவசரமாக விதிக்கப்பட்ட காலக்கெடு, நவம்பர் 2025 தேர்தலுக்கு முன் பாதிக்கப்படக்கூடிய குழுக்களை விலக்குவதற்கு உள்நோக்கம் இருப்பதை வெளிப்படுத்துகிறது.

எஸ்டிபிஐ, சிறப்பு தீவிர திருத்தம் (SIR) செயல்முறையை நிறுத்தவும், ஆதார் மற்றும் ரேஷன் கார்டை செல்லுபடியாகும் ஆவணங்களாக ஏற்கவும், காலக்கெடுவை நீட்டிக்கவும் கோருகிறது. சுப்ரீம் கோர்ட்டு, தேர்தல் ஆணையத்தைப் பொறுப்பாக்கவும், பீகாரின் குடிமக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் வேண்டுகிறோம். எஸ்டிபிஐ, பீகாரின் மக்களுடன் துணைநின்று, வாக்குரிமையைப் பாதுகாக்கப் போராடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## தவெக தலைவர் விஜய்ஐ சந்தித்த தூய்மை பணியாளர்கள்

சென்னை ஆக. 13

சென்னை மாநகராட்சி ராயபுரம், திரு.வி.க.நகர் ஆகிய மண்டலங்களின் தூய்மை பணியை தனியார் நிறுவனத்துக்கு மாநகராட்சி நிர்வாகம் வழங்கியதைக் கண்டித்து உழைப்பவர் உரிமை இயக்கம் சார்பில் அந்த மண்டலங்களின் தூய்மை பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பணி நிரந்தரம், பணிப்பாதுகாப்பு, ஊதிய நிர்ணயம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் மாளிகை முன்பு 11 வது நாளாக தொடர் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, சேகர்பாபு, மேயர் பிரியா, மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது. இதனால், தூய்மை பணியாளர்களின் போராட்டம் தொடர்ந்து நடை



பெற்று வருகிறது.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மை பணியாளர்கள் இன்று தவெக தலைவர் விஜய்ஐ சந்தித்தனர். சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தூய்மை பணியாளர்களின் குழுவினர் தவெக தலைவர் விஜய்ஐ சந்தித்தனர். இந்த சந்திப்பின்போது போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தூய்மை பணியாளர்களுக்கு விஜய் ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

13.8.2025

# கடவுள் ராமர் குறித்து பேசி சர்ச்சையில் சிக்கிய கவிஞர் வைரமுத்து




சென்னை, ஆக. 13

சென்னை மயிலாப்பூரில் அண்மையில் நடந்த கம்பன் விழாவில் பங்கேற்ற கவிஞர் வைரமுத்து கம்ப ராமாயணத்தை மேற்கொள் காட்டி பேசினார். அப்போது கடவுள் ராமர் புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்றும், புத்தி சுவாதீனம் இல்லாதவர் குற்றம் செய்தால் தண்டனை குற்றமாகாது என்பது இந்திய தண்டனை சட்டம் என அவர் பேசிய கருத்து இந்து மத வழிபாட்டாளர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

மேலும் ராமர் குறித்த வைரமுத்துவின் பேச்சுக்கு பலரும் கண்டனம் தெரிவித்தனர். இந்த நிலையில், கம்பன் விழாவில் ராமரை இழிவுபடுத்தி கவிஞர் வைரமுத்து பேசியதாக கூறி புதுவை மாநில பா.ஜனதா மகளிர் அணி சார்பில் இந்திராகாந்தி சிலை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு பாஜக மாநில தலைவர் வி.பி.ராமலிங்கம் தலைமை தாங்கினார்.

இதில் மகளிர் அணி தலைவி தாமரைச்செல்வி, மாநில செயலாளர்கள் மோகன்குமார், லட்சுமி நாராயணன் உள்பட பலர் கலந்து கொண்டனர். அவர்கள் வைரமுத்துவுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். திடீரென அவரது புகைப்படத்தை கிழித்து எறிந்தனர். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட உருளையன்பேட்டை போலீசார் அவற்றை பறிமுதல் செய்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

கவிஞர் வைரமுத்து பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

"மத ஒற்றுமை" குறித்து மேடைக்கு மேடை முழங்கும் திமுகவினர் இதுவரை எந்தக் கண்டனத்தையும் தெரிவிக்காதது ஏன்?. அமைச்சர்கள் முதல் கவுன்சிலர்கள் வரை திமுக உடன்பிறப்புகள் பலர் இந்து மதத்தவராக இருக்கையில் இதுபோன்ற கருத்துகள் அவர்களது கட்சியினரையும் புண்படுத்தும் என்பது தெரியாதா?.

எனவே, கம்ப ராமாயணத்தை முழுமையாகப் படித்துணராமல், தமிழ் அகராதியின் அடிப்படை அர்த்தம் அறியாமல் வைரமுத்து போன்றோர் தங்கள் இஷ்டத்திற்கு திரித்துப் பேசுவது கண்டனத்திற்குரியது. தனது இந்த அவதூறான கருத்துகளுக்கு பொதுவெளியில் அவர் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும். தங்களை மத நல்லிணக்கத்தின் தூணாக முன்னிறுத்திக் கொள்ளும் ஆளும் அரசு அதைஉறுதிப்படுத்தவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



செல்வபுரம், திருவள்ளுவர் நகர் பகுதியில், தூய்மைப் பணியாளர்கள் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளைத் தரம் பிரித்துச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பணிகளை, மாநகராட்சி ஆணையாளர் மா. சிவகுரு பிரபாகரன் இன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகர்நல அலுவலர் டாக்டர் ஏ. மோகன், நகரமைப்பு அலுவலர் ராஜசேகரன் மற்றும் பிற மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சென்னைக்கு வந்த சரக்கு விமானத்தில் தீ விபத்தா? விமான நிலைய நிர்வாகம் மறுப்பு

சென்னை, ஆக. 13

மலேசியாவில் இருந்து சென்னைவிமானநிலையத்திற்கு வந்த சரக்கு விமானத்தில் தீ விபத்து ஏற்பட்டதாக தகவல் வெளியானது. விமானத்தின் 4வது இன்ஜினில் தீ பிடித்ததாகவும், விமானத்தில் பற்றிய தீ உடனடியாக அணைக்கப்பட்டதாகவும் செய்திகள் பரவியது. சரக்கு விமானத்தில் தீ பிடித்ததாக வெளியான தகவல் பயணிகள் இடையே பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், சென்னை விமான நிலைய நிர்வாகம் அதனை மறுத்துள்ளது.

இதுதொடர்பாக விமானநிலைய நிர்வாகம் கூறுகையில், " மலேசியாவில் இருந்து சென்னை வந்த சரக்கு விமானம் தரையிறங்கும் போது தீப்பிடித்ததாக வெளியான தகவல் பொய்யானது; தீ பாதிப்பு எதுவும் இல்லை .அதிகாலை 4 மணிக்கு அந்த விமானம் தரையிறங்கிய போது, ஓடுபாதையில் உராய்ந்து அதிகப்படியான புகை எழும்பியது. சரக்கு விமானங்கள் தரையிறங்கும் போது இது வழக்கமான ஒன்று" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதவிக்காக மதிமுக என்றும் கூட்டணி வைப்பதில்லை: வைகோ



தென்காசி, ஆக. 13

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் காயிதே மில்லத் திடலில் மதிமுக சார்பில் 'மதசார்பின்மையும், கூட்டாட்சியும்' என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடந்தது. இதில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

மதிமுகஒருபோதும்பதவிக்காககூட்டணிவைத்தது இல்லை. கொள்கைக்காகவே கூட்டணி வைப்போம். கூட்டாட்சி தத்துவம் மட்டும்தான் இந்தியாவை பாதுகாக்கும். மதச்சார்பின்மை தான் இந்தியாவை வளர்க்கும். இந்துமுஸ்லிம் ஒற்றுமையை சீர்குலைக்க பாஜக முயற்சிக்கிறது. பொதுசிவில் சட்டம் கொண்டு வருவதற்கான முயற்சியையும் பாஜக எடுத்து வருகிறது. மத்திய அரசு தமிழகத்திற்கு தர வேண்டிய நிதியை மறுத்து வருகிறது. தமிழகத்தில் நடைபெற்றுவரும் திராவிட மாடல் ஆட்சியை மற்ற மாநிலங்களும் செயல்படுத்த ஆர்வம் காட்டி வருகின்றன. இவ்வாறு அவர் பேசினார்.

# இன்றைய ராசி பலன்கள் (13.8.2025)

**மேஷம்**: முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவு உயரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**ரிஷபம்**: புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம். எதிர்பார்த்த செய்தி வந்து சேரும்.நண்

**மிதுனம்**: மனதில் இருந்த கவலை அகலும். உடல் நலம் மேம்படும். உறவினர்களுடன் நேரம் செலவிடுவீர்கள்.

**கடகம்**: புதிய திட்டங்கள் தொடங்க உகந்த நாள். வீடு, வாகன தொடர்பான முயற்சிகளில் நல்ல விளைவு.

**சிம்மம்**: சில விஷயங்களில் பொறுமை அவசியம்.தேவையற்றசெலவுகளை தவிர்க்கவும். உடல் நலத்தில் கவனம் தேவை.

**கன்னி**: உழைப்புக்கு மதிப்பு கிடைக்கும். பணியில் பதவி உயர்வுவாய்ப்பு.மனநிறைவு தரும் நாள்.

**துலாம்**: புதிய நண்பர்கள் சேருவர். உறவுகளில் ஒற்றுமை நிலவும். பொருளாதார நிலை உயரும்..

**விருச்சிகம்**: சிந்தனையில் தெளிவு வரும். கடன் தொடர்பான பிரச்சினைகள் தீரும். பயணம் பயனளிக்கும்.

**தனுசு**: கல்வியில்சிறப்புபெறுவீர்கள். வேலை தொடர்பான புதிய வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**மகரம்**: பணிகளில் விரைந்து முடிவு எடுப்பது நல்லது. வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்**: பழைய நண்பர்களிடமிருந்து உதவி கிடைக்கும். முதலீடுகளில் லாபம் அதிகரிக்கும். சுகநிலை சிறப்பாகும்.

**மீனம்**: குடும்பத்தில்நல்லநிகழ்வுகள் நடக்கும். மனதில் உற்சாகம் கூடும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

# மாணவிக்கு பாலியல் தொல்லை: கராத்தே மாஸ்டர் குற்றவாளி என தீர்ப்பு தண்டனை விவரம் அறிவிப்பு



சென்னை, ஆக. 13

சென்னை அண்ணாநகரைச் சேர்ந்தவர் கெபிராஜ் (வயது 41). கராத்தே மாஸ்டர். இவர் கெருகம்பாக்கத்தில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் பகுதி நேர கராத்தே பயிற்சியாளராக சில ஆண்டுகள் பணியாற்றினார். மேலும் சில பள்ளிகளிலும் அவர், பயிற்சியாளராக பணிபுரிந்து வந்துள்ளார்.

பயிற்சி பெறும் மாணவிகளை போட்டிக்காக வெளி மாவட்டங்களுக்கு கெபிராஜ் அழைத்து செல்வது வழக்கம். கடந்த 2014ம் ஆண்டு இவர், தன்னிடம் பயிற்சி பெற்ற மாணவிகளை போட்டிக்காக நாமக்கல் அழைத்து சென்றுள்ளார்.

போட்டி முடிந்த பின்பு நாமக்கல்லில் இருந்து ஈரோடு ரெயில் நிலையத்துக்கு காரில் வந்த போது 19 வயது மாணவிக்கு கெபிராஜ் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். மேலும், இதுகுறித்து யாரிடமும் சொல்லக்கூடாது என மிரட்டல் விடுத்ததாகவும் கூறப்படுகிறது. இதுதொடர்பாக அந்த மாணவி கடந்த 2021ம் ஆண்டு அண்ணாநகர் அனைத்து மகளிர் போலீசில் புகார் செய்தார். போலீசார் கெபிராஜ் மீது வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். இதன்பின்பு, இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டது. சி.பி.சி.ஐ.டி போலீசார் விசாரணை நடத்தி சென்னை மகளிர்கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை சென்னை மகளிர் கோர்ட்டில் நீதிபதி பத்மா முன்னிலையில் நடந்தது. போலீசார் தரப்பில் சிறப்பு அரசு வக்கீல் ரவீந்திரநாத் ஜெயபால் ஆஜராகி வாதாடினார். போலீசார் தரப்பில் 32 பேர் சாட்சியம் அளித்தனர். இந்த வழக்கில் விசாரணை முடிவடைந்த நிலையில் 'கெபிராஜ் குற்ற வாளி' என தீர்ப்பு கூறப்பட்டது. இந்நிலையில் தண்டனை விவரம் இன்று (செவ்வாய்க்கிழமை) அறிவிக்கப்படும் என நீதிபதி அறிவித்தார்.

# நடிகர் அபிநய் மருத்துவ செலவுக்கு பணம் கொடுத்து உதவிய தனுஷ்



நடிகர் தனுஷ் நடிப்பில் வெளியான 'துள்ளுவதோ இளமை' படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமாகி பிரபலமானவர், அபினய். அதனைத்தொடர்ந்து ஓரிரு படங்களிலும் நடித்தார். விஜய்யின் 'துப்பாக்கி' திரைப்படத்தில் வில்லனுக்கு இவர்தான் குரல் கொடுத்திருந்தார். ஒருகட்டத்தில் படவாய்ப்புகள் இல்லாமல் போக, வருமானத்துக்கு கஷ்டப்பட்டார்.

சமீப காலமாக கல்லீரல் பாதிப்பால் அவதிப்பட்டு வரும் அபினய், சிகிச்சைக்கு பணமின்றி தவித்து வந்தார். இதற்கிடையில் சின்னத்திரை நடிகர் பாலா, அபினய்யை அவரது வீட்டில் சந்தித்து ரூ.1 லட்சம் நிதியுதவியாக வழங்கினார். அப்போது அபிநய் கண்கலங்கி பேசிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.

எலும்பும், தோலுமாய் இருக்கும் நடிக்கும் அபிநய்க்கு திரையிலகினர் உதவ முன்வர வேண்டும் என்று ரசிகர்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த நிலையில், நடிகர் தனுஷ் அபிநய்க்கு மருத்துவ செலவுக்கு ரூ.5 லட்சம் கொடுத்து உதவி செய்துள்ளார்.

# பெண் டாக்டருக்கு பாலியல் வன்கொடுமை: பிரபல ராப் பாடகரை கைது செய்ய லுக் அவுட் நோட்டீஸ்

கேரளமாநிலம் கொச்சியை சேர்ந்த பிரபல ராப் பாடகர் வேடன். இவர் மீது எர்ணாகுளத்தை சேர்ந்த பெண் டாக்டர் திருக்காக்கரா போலீஸ் நிலையத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பாலியல் புகார் அளித்து இருந்தார். அதில், சமூக வலைத்தளம் மூலம் அறிமுகமான எங்களுக்கு இடையே காதல் மலர்ந்தது. அவர் என்னை திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி கொடுத்து விட்டு, கோழிக்கோட்டில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கு அழைத்து சென்று பாலியல் வன்கொடுமை செய்தார். பின்னர் கடந்த 2021ம் ஆண்டு ஆகஸ்டு முதல் 2023ம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஆசைவார்த்தை கூறி என்னை பல இடங்களுக்கு அழைத்து சென்று பாலியல் வன்கொடுமை செய்தார். இதையடுத்து திருமணம் செய்வதில் இருந்து பின் வாங்கினார். எனக்கு ஏற்பட்ட அநீதியை பொறுக்க முடியாமல் புகார் அளித்து உள்ளேன் என்று கூறப்பட்டு இருந்தது. அதன் பேரில் போலீசார் வேடன் மீது பாலியல் அத்துமீறல் வழக்குப்பதிவு செய்தனர். பின்னர் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வந்த நிலையில், அவர் தலைமறைவாகி விட்டார். வேடனை கைது செய்யவும், வெளிநாடு தப்பி செல்லாமல் இருக்கவும் திருக்காக்கரா போலீஸ் துணை கமிஷனர் லுக் அவுட் நோட்டீஸ் வெளியிட்டு உள்ளார். மேலும் முன் ஜாமீன் கேட்டு வேடன் ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு வருகிற 18ந் தேதி விசாரணைக்கு வர உள்ளது.

# அமிதாப்பச்சன் படத்திலிருந்து விலகுவதாக அறிவித்த தீபிகா படுகோனே



பிரபல ஹாலிவுட் படமான 'தி இன்டர்ன்' படத்தின் இந்தி ரீமேக்கில் அமிதாப்பச்சன், தீபிகா படுகோனே நடிப்பதாக இருந்தது. கடந்த 2015ல் வெளியாகி வெற்றி பெற்ற இந்த படத்தை இந்தியில் ரீமேக் செய்வதற்கான முயற்சிகள் 2020ம் ஆண்டு தொடங்கியது. இந்த படத்தில் ரிஷிகபூர், தீபிகா படுகோனே முக்கிய கதாபாத்திரங்களில் நடிப்பார்கள் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால், ரிஷிகபூர் மரணமடைந்ததால் அவருக்கு பதில் அமிதாப்பச்சன் நடிப்பதாக அறிவிக்கப்பட்டது. கடந்த 5 ஆண்டுகளாக படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்படாமலேயே இருந்தது.

இந்நிலையில் தீபிகா படுகோனே படத்தில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். தீபிகா படத்தில் நடிப்பதில் இருந்து மட்டும் விலகி தயாரிப்பாளராக பணியாற்றுவதாக அறிவித்துள்ளார். இதையடுத்து புதிய கதாநாயகி தேர்வு தீவிரமாக நடந்து வருகிறது.


# "ஒரே இரவில் இரு விருதுகள்" மாளவிகா மோகனனுக்கு ரசிகர்கள் வாழ்த்து

'பட்டம்போலே' என்ற மலையாள படத்தின் மூலமாக சினிமாவில் காலடி எடுத்து வைத்தவர், மாளவிகா மோகனன். அதனைத்தொடர்ந்து தமிழ், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளிலும் பிஸியாக நடித்துவருகிறார். தற்போது, தமிழில் 'சர்தார் 2', தெலுங்கில் 'தி ராஜா சாப்',. மலையாளத்தில் 'ஹிருதயபூர்வம்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார்.

இந்தநிலையில் ஐதராபாத்தில் நடந்த ஒரு இரவு விருந்து நிகழ்ச்சியில் மாளவிகா மோகனன் கலந்துகொண்டார். அந்த விழாவில் அவருக்கு, "ஹாட்ஸ்டெப்பர் ஆப் த இயர்' மற்றும் 'ஹாட்டஸ்ட் ஸ்டார் ஆப் த இயர்' என்ற இரண்டு விருதுகள் வழங்கப்பட்டது.

இந்த விருதுகள் குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள மாளவிகா மோகனன், 'இந்த விருதுகளும் சூடாகவே இருக்கிறது' என்று பெருமைபட சமூக வலைதள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். விருது வென்ற மாளவிகா மோகனனுக்கு ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்: அதிர்ச்சி தோல்வி கண்ட டாமி பால்



சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான டாமி பால் (அமெரிக்கா) பிரான்சின் அட்ரியன் மன்னாரினோ உடன் மோதினார்.

இந்த போட்டியின் முதல் செட்டை 75 என்ற புள்ளிக்கணக்கில் டாமி பால் கைப்பற்றினார். இதையடுத்து நடந்த 2 மற்றும் 3வது செட்களில் அபாரமாக செயல்பட்ட அட்ரியன் மன்னாரினோ 63, 64 என்ற செட் கணக்கில் டாமி பாலை வீழ்த்தினார். இறுதியில் அட்ரியன் மன்னாரினோ 57, 63, 64 என்ற செட் கணக்கில் டாமி பாலை வீழ்த்தி 4வது சுற்றுக்கு முன்னேறினார். அதிர்ச்சி தோல்வி கண்ட டாமி பால் தொடரில் இருந்து வெளியேறினார்.

# இந்திய அணியில் இடம்பிடிக்க மகளிர் பிரீமியர் லீக் மிகப் பெரிய பங்களிப்பை வழங்கி வருகிறது ஜெமிமா ரோட்ரிக்ஸ்




13வது மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 30ந்தேதி முதல் நவம்பர் 2ந்தேதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடக்கிறது. இந்தியாவில் மகளிர் உலகக் கோப்பை அரங்கேறுவது இது 4வது முறையாகும்.

இதில் இந்தியா, நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, இலங்கை, இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, வங்காளதேசம் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் டாப்4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்தியாவில் பெங்களூரு, கவுகாத்தி, விசாகப்பட்டினம், இந்தூரிலும், இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் மொத்தம் 31 ஆட்டங்கள் நடத்தப்படுகின்றன. பாதுகாப்பு பிரச்சினை காரணமாக பாகிஸ்தான் அணிக்குரிய அனைத்து ஆட்டங்களும் இலங்கையில் இடம் பெறுகின்றன. செப்.30ந்தேதி பெங்களூருவில் நடக்கும் தொடக்க ஆட்டத்தில் இந்தியா இலங்கை அணிகள் மோதுகின்றன.

உலகக் கோப்பை போட்டி தொடங்குவதற்கு இன்னும் 50 நாட்கள் மட்டுமே இருப்பதை குறிக்கும் கவுண்ட்டவுன் நிகழ்ச்சி மும்பையில் நேற்று நடந்தது. இதில் ஐ.சி.சி. தலைவர் ஜெய்ஷா, தலைமை செயல் அதிகாரி சஞ்ஜோக் குப்தா, இந்திய முன்னாள் வீரர் யுவராஜ்சிங், முன்னாள் வீராங்கனை மிதாலிராஜ், இந்திய மகளிர் அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர், துணை கேப்டன் மந்தனா, ஜெமிமா ரோட்ரிக்ஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஜெமிமா ரோட்ரிக்ஸ் பேசுகையில் கூறியதாவது, இளம் வீராங்கனைகள் இந்திய அணியில் இடம்பிடிப்பதற்கு மகளிர் பிரீமியர் லீக் மிகப் பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. சர்வதேசப் போட்டிகளில் விளையாடும்போது, இளம் வீராங்கனைகள் மிகப் பெரிய அளவில் அழுத்தத்தில் இருப்பதில்லை. நாங்கள் கிராந்தி கவுதின் செயல்பாட்டை பார்த்தோம். அவர் மிகவும் அச்சமின்றி செயல்படுகிறார்.

அதனைபார்ப்பதற்கு மிகவும் நன்றாக இருந்தது. இளம் வீராங்கனைகள் சிறப்பாக செயல்படுவது அணியில் அனைவரும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற உந்துதலைக் கொடுக்கிறது. இவ்வாறு அவர் கூறினார். ஐ.சி.சி ஒருநாள் உலகக் கோப்பைத் தொடரில் வருகிற செப்டம்பர் 30ம் தேதி பெங்களூருவில் நடைபெறும் தனது முதல் போட்டியில் இந்திய அணி, இலங்கையை எதிர்த்து விளையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆசிய குத்துச்சண்டை: ரித்திகாவுக்கு 'தங்கம்'

தாய்லாந்தில், 22 வயதுகுட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் தொடர் நடந்தது. இதில் மகளிருக்கான 80+ கி.கி., எடைப்பிரிவு இறுதிப்போட்டியில் இந்தியாவின் ரித்திகா 41 என்ற கணக்கில் கஜகஸ்தானின் அசெல் டோக்டாசினை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். மகளிருக்கான 57 கி.கி., பிரிவு இறுதிப்போட்டியில் இந்தியாவின் யாத்ரி படேல் 23 என, உஸ்பெகிஸ்தானின் குமோரபோனு மாமஜோனோவாவிடம் தோல்வியடைந்து வெள்ளி வென்றார். மற்றொரு இறுதிப்போட்டியில் (60 கி.கி.,) இந்தியாவின் பிரியா 23 என சீனாவின் யூ டியானிடம் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார். ஆண்களுக்கான 75 கி.கி., பிரிவு இறுதிப்போட்டியில் இந்தியாவின் நீரஜ், உஸ்பெகிஸ்தானின் ஷவ்கட்ஜோன் போல்டேவிடம் தோல்வியடைந்து வெள்ளி வென்றார். மற்றொரு இறுதிப்போட்டியில் (90+ கி.கி.,) இந்தியாவின் இஷான் கடாரியா, உஸ்பெகிஸ் தானின் கலிம்ஜோன் மாமாசோலியேவிடம் வீழ்ந்தார். முடிவில், 22 வயதுகுட்பட்டோர் பிரிவில் ஒரு தங்கம், 4 வெள்ளி, 8 வெண்கலம் என 13 பதக்கம் வென்ற இந்தியா 4வது இடம் பிடித்தது. இதன் 19 வயதுகுட்பட்டோர் பிரிவில் இந்தியாவுக்கு 3 தங்கம், 7 வெள்ளி, 4 வெண்கலம் என, 14 பதக்கம் கிடைத்திருந்தது.

DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.